6.09.2024
S.C.No. 27/2019
சுரேஷ் (PW12)
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் இளங்கலை வரலாறு படித்துள்ளேன். தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973 என்று விதிகள் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதற்க்கு உட்பட்டுதான் பணி செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். 6.8.2017 அன்று நான் எந்த கிராமத்தில் வசித்தேன் என்றால் வென்குன்றம் என்ற கிராமத்தில் வசித்தேன். சம்பவ தேதியில் நான் வென்குன்றம் கிராமத்தில் கூடியிருப்பு வைத்திருத்தேனா என்றால் வைத்திருந்தேன். நான் சம்பவ காலத்தில் வென்குன்ற கிராமத்தில் அரசு ஊழியர் நடத்தை விதிகளுக்கு புறம்பாக குடியிருக்கவில்லை என்றும் தற்போது வேலைக்கு ஆபத்து வரும் என்பதால் குடியிருப்பதாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு குடியிருந்ததை காட்டும் ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு குடியிருந்ததை காட்ட இருப்பிட சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ந.க. எண் என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. நான் யார் அழைப்பின் பேரில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்க்கு நான் சென்றேன் என்றால் மாங்காடு காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் சென்றேன். என்னை சாட்சிக்கு அழைப்பதற்க்கு முன்னர் காவல் ஆய்வாளர் தாசில்தாருக்கு கடிதம் எழுத வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு எழுதப்படும் கடிதத்தின் பேரில் வட்டாட்சியர் என்னை பணியமர்த்தி உத்திரவு பிறப்பித்த பின்னரே நான் சாட்சியாக செல்லமுடியும் என்றால் ஆய்வாளர் சொன்னதின் பேரில் சென்றேன். அவசரத்திற்காக கைபேசி அழைப்பு வந்ததால் சென்றேன். அரசு ஊழியர் விதியை மீறி செல்லலாம் என்றால் நான் விதியை மீறவில்லை. நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சான்று பொருள் கைப்பற்றபட்ட விபரத்தை கூறியுள்ளேனா என்றால் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் பார்வை மகசரிலும் மாதிரிவரைபடத்திலும் ரத்தம் பட்ட மண் சாதாரண மண் கைப்பற்றும்போது கையொப்பமிட்டேன். நான் காவல்

ஆய்வாளர் வாக்குமூலத்திலும் நீதிமன்றத்தில் கொடுத்த சாட்சியத்திலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பார்த்ததைதான் சொன்னேன். திசு என்றால் எனக்கு என்ன என்று தெரியாது. திசு என்றால் என்னவென்று தெரியாமல் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் ஆய்வாளர் கைப்பற்றும்போது திசு என்று சொன்னார். மண்ணில் என்ன பொருள் புதையுண்டு இருந்தாலும் அதனை தாசில்தார் முன்னிலையில்தான் எடுக்க வேண்டும் என்று விதி உள்ளது என்றால் விதி உள்ள விபரம் தெரியும். ஆனால் சான்று பொருள் தரைமேல்தான் இருந்தது. திசு என்றால் அழுகிய நிலையிலுள்ள சதையாகும். அழுகிய திசுவை தனியாக எடுக்கவில்லை மணலிலிருந்து எடுத்தார்கள் என்றால் சரிதான். மண்ணில் புதையுண்ட திசுவை எடுக்க நான் ஏன் சென்றேன் என்றால் அது தரையின் மேல்தான் இருந்தது. வட்டாட்சியருக்கு தெரிவிக்காமல் நான் இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியக இருந்தது சட்டத்திற்க்கு முரணானது (Ultra vires) என்றால் சரியல்ல. வட்டாட்சியரின் அனுமதி இல்லாமல் சம்பவ இடத்திற்க்கு வந்து கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது சட்டத்திற்க்கு முரணானது சாட்சி செல்வகுமார் கொடுத்த சாட்சியை உறுதியூட்டம் செய்வதற்காக நான் பொய்யான சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவம் தெரியாது என்றும் என்னுடன் பணியாற்றும் ஊழியருக்காக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.